# இளம் வயதில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் குடும்பத் தலைவிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்: ஆலங்குலம் மற்றும் சம்புநகர் கிராமங்களை மையப்படுத்திய ஆய்வு

**MYF.Naufiya(1), MUF.Azra(2), MH.Husna(3), MBF.Naskiya(4)**

1, 2, 3 &4 Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka,
binthyusuf94@gmail.com,azrahfathima@gmail.com,
hamidhrabi94@gmail.com, kiyahadhi@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகக் கட்டமைப்பு சிதைந்து விடாமல் பாதுகாப்பதற்கான அரணாக குடும்ப வாழ்வை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. குடும்ப வாழ்வின் நோக்கம், தேவைகள் மகிழ்ச்சிகரமான விவாக வாழ்க்கைக்கான அடிப்படைகளை இஸ்லாம் விரிவாக முன்வைத்துள்ளது. ஆயினும் ஓர் ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்வில் தொடர்ந்தும் இணைந்து வாழ முடியாத சூழ்நிலை உருவாகும் போது இஸ்லாம் தவிர்க்க முடியாத நிலையில் விவாக விடுதலையை அனுமதிக்கின்றது. அதனை ஊக்குவிக்கவில்லை. இப்பிண்ணனியில் ஆலங்குலம் மற்றும் சம்புநகர் போன்றன மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் கிராமங்களாகும். அங்கு வாழும் மக்கள் குடும்ப வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் தமது வாழ்வில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதால் பல விவாகரத்துக்கள் இடம்பெறுகின்றன.இது பல குடும்பச் சீரழிவுகள் இடம்பெறுவதற்கு வழிவகுக்கின்றன. அதனடிப்படையில் பின்தங்கிய நிலையில் காணப்படும் இக்கிராம வாழ் மக்களின் வாழ்வை சீர்செய்வதற்கான முன்மொழிவுகளும் இளவயது விவாகரத்து இடம்பெறுகின்ற அளவைக் குறைப்பதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இவ்வாய்வின் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. பண்பளவிலான மற்றும் எண்ணிக்கையளவிலான இவ்வாய்வின் முடிவுகளும் வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் போன்றவற்றை மையமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் நிலைத்தரவுகளும் நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவற்றினூடாக இரண்டாம் நிலைத்தரவுகளும் பெறப்பட்டு, அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்** : விவாகரத்து, ஆலங்குலம், சம்புநகர், இளவயதுத் திருமணம்

## ஆய்வு அறிமுகம்

இஸ்லாம் உருவாக்க விரும்புகின்ற சமூக அமைப்பின் அடிப்படையாக விளங்குவது சிறந்த குடும்ப கட்டமைப்பாகும். சமூகத்தில் தலைமத்துவ வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய தனி மனிதனின் பயிற்சிப்பாசறையாக இந்த குடும்பம் எனும் நிறுவனமே விளங்குகிறது. ஏனெனில் ஒரு தனிமனிதனின் ஆளுமை உருவாக்கத்தில் பெற்றோரினதும் குடும்ப அங்கத்தினரதும் பங்கே முதன்மையானது.

''இன்னும் கணவன் மனைவி இருவருக்குமிடையே பிளவு ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சினால் அவரின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும் அவளின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும் நீங்கள் அவ்விருவரிடமும் அனுப்புங்கள் நடுவர்களாகியவர்கள் கணவன் மனைவிக்கிடையே இணக்கத்தை நாடினால் இருவருடைய இணக்கத்துக்கும் அல்லாஹ் உதவி செய்வான்.''(அல்குர்ஆன்:04:35)

இம்முயற்சிகள் வெற்றி காணாத போது கையாளப்படும் இறுதி முடிவு விவாகரத்து ஆகும். எனவேதான் நபி (ஸல்) அவர்கள்:‘‘அல்லாஹ் அனுமதித்தவற்றில் அவனுக்கு மிகவும் வெறுப்பான செயல் விவாகரத்தாகும்’’ (அபூ தாவூத் )எனக் குறிப்பிட்டார்கள்.அதனடிப்படையில் களுத்துறை மாவட்ட முஸ்லிம்களிடையே விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி விவாகரத்துக்கு இட்டுச்செல்லும் காரணிகள் பல்வகைத்தன்மை கொண்டுள்ளன என்று அறியப்பட்டது மேலும் பொருளாதாரம், கல்வி அறிவின்மை, குடும்பச்சீரழிவு, போதைவஸ்துப் பாவனை, வறுமை போன்றன விவாகரத்துக்கான முதன்மைக் காரணங்களாக உள்ள அதேவேளை ஒப்பீட்டு ரீதியில் இளம் தம்பதிகளுக்கிடையிலான விவாகரத்தின் விகிதாசாரம் அதிகமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(எப்.ஸம்ஹா,எம்.தாரிக், எப்.ருமானா:2017).

ஆய்வுப் பிரதேசங்களான ஆலங்குலம் மற்றும் சம்புநகர் பிரதேசங்கள் இவை அம்பாறை மாவட்டத்தில் அட்டாளச்சேனை பிரதேச செயலகப்பிரிவின் கீழ் அமைந்துள்ளன.

ஆய்வுப்பிரதேசங்களான ஆலங்குலம் மற்றும் சம்புநகர் பிரதேசங்கள் அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப்பிரிவின் பரப்பு 94.495$KM^2$ ஆகும். அதன் கீழ் 17 கிராம சேவகப்பிரிவுகள் உள்ளடங்குகின்றன. அதில் ஆலங்குலம் 15 ஆம் கிரா ம சேவகர் பிரிவுக்குள் உட்பட்டது. அங்கு 488 குடும்பங்களைச் சேர்ந்த 1738 பேர் ஆலங்குலத்தில் வாழ்கின்றனர். அதே போன்று அட்டாளைச்சேனை 05 ஆம் பிரிவில் உள்ளடங்கும் சம்புநகர், முல்லைத்தீவு, புறத்தோட்டம் ஆகிய 03 கிராமங்கள் உள்ளடங்குகின்றன. மூன்று கிராமங்களில் மொத்தமாக 306 குடும்பங்கள் உள்ளனர். இவற்றில் சம்புநகரில் 75 குடும்பங்களைச் சேர்ந்த 225 பேர் வாழ்கின்றனர்.(அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் 2018)

இவ்விரு கிராமங்களில் வாழும் மக்கள் மத்தியில் இளவயது திருமணம், இளவயதில் இடம்பெறும் விவாகரத்தும் இடம்பெறுகின்றன. எனவே அதற்கான காரணங்களை கண்டறிய வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டது. முதலாம் நிலைத்தரவுகளைப் பெறும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்து, நேரடிக் கலந்துரையாடல் ஆகிய ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.இரண்டாம் நிலைத்தரவுகளுக்காக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. பண்பளவிலான இவ்வாய்வில் தெளிவான முடிவுகளை பெறுவதற்கு பண்பு ரீதியான இவ்வாய்வின் குடித்தொகையாக சம்புநகர் ,ஆலங்குளம் பிரதேசங்களில் இளம் வயதில் விவாகரத்து பெற்ற 50 பேர் கொள்ளப்பட்டனர். இவ்வாய்வுக்குடித்தொகையிலிருந்து ஆய்வு மாதிரியாக 20 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இது எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் இம்மாதிரி எடுப்பு மேற்கொள்ளப்பட்டது. மாதிரியாக தெரிவு செய்யப்பட்டவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதோடு துல்லியமான தரவுகளை உறுதிசெய்வதற்கு நேரடி கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது. பெறப்பட்ட முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளைப் பகுப்பாய்வுகளை செய்வதற்கு Ms Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டன.

**ஆய்வுப்பிரச்சினை**

கிழக்கு மாகாண அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆலங்குலம் மற்றும் சம்புநகர் ஆகிய இரு முஸ்லிம் கிராமங்களிலும் குறிப்பிடத்தக்களவு இளவயது திருமணங்களும்,விவாகரத்துக்களும் இடம்பெறுகின்றன. இதனால் இளவயதுப்பெண்கள் பலர் பல்வேறு வகையான சமூக ,பொருளாதார, கலாசார பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவதும் காரணங்களைக் கண்டறிவதற்கும் இவ்வாய்வு முயற்சிக்கின்றது.

**ஆய்வின் நோக்கம்**

- குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் முஸ்லிம் குடும்பங்களில் இடம்பெறும் விவாகரத்துக்கான காரணங்களை கண்டறிதல்.
- இளம்வயதில் விவாகரத்து பெற்ற முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை முன்வைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

1) ஆலங்குலம் மற்றும் சம்புநகர் பிரதேசங்களில் விவாகரத்து இடம்பெறுவதற்கான காரணங்கள் எவை?
2) இப்பிரதேசத்தில் விவாகரத்தினால் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

**இலக்கிய மீளாய்வு**

விவாகரத்து மற்றும் விவாகரத்தினால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து பல ஆய்வுகள், கட்டுரைகள் என்பன பிரசுரிக்கப்பட்டுள்ளன.

எப்.ஸம்ஹா, எம்.தாரிக், எப்.ருமானா என்பவர்களால் (2017) விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்களை கண்டறிதல் எனும் தலைப்பில் களுத்துறை மாவட்டத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் போதைப்பொருள் பாவனை, சீதனப் பிரச்சினை, முறை தவறிய தொடர்புகள், மார்க்க அறிவின்மை போன்ற பல காரணங்கள் விவாகரத்திற்கான முதன்மைக் காரணிகளாக முன்மொழியப்பட்டன.

அப்துல் நாசர் என்பவரால் (2016) தலாக் நிகழ்வது எதற்காக எனும் தலைப்பில் சமகாலத்தில் மணவிலக்கு இடம்பெறுவதற்கான காரணங்களையும் அதனை தவிர்ப்பதற்கான முன்மொழிவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எஸ்.எம்.இம்தியாஸ் என்பவரால் (2013) முஸ்லிம் சமூகத்தின் குடும்பவியல் நிலை எனும் தலைப்பில் தலாக் இடம்பெறுவதற்கான காரணங்கள் மற்றும் சம்பவங்கள் என்பவற்றை சுட்டிக்காட்டியுள்ளார்.

உஷ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களால் (2013) பெண் நீதமும் நிதர்சனமும் நூலில் மணவிலக்கு அளிக்கும் உரிமை(தலாக்) எனும் தலைப்பில் பெண்கள் தலாக் பெறும் உரிமை பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி ஆய்வுகள் இளம் வயதில் விவாகரத்துப் பெற்ற முஸ்லிம் குடும்பத் தலைவிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆய்வுக்குட்படுத்தப்படாமையினால் ஆலங்குலம் மற்றும் சம்புநகர் கிராமங்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தரவுப்பகுப்பாய்வும் பெறுபேறுகளும்**

இவ்வாய்வில் குடித்தொகையாகக் கொள்ளப்பட்ட 50 குடும்பத்தலைவிகளுள் 20 இற்கும் அதிகமான குடும்பத்தலைவிகள் 15 தொடக்கம் 30 வயது வரையான வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

இலங்கையின் பொதுச்சட்டத்தின் பிரகாரம் திருமணம் செய்வதற்கு தகுதியான வயது 18 ஆகும். இது அங்கீகரிக்கப்பட்ட திருமண வயதாகும்.அதன்படி இவர்களுள் அதிகமானனோர் இளம் வயதில் திருமணமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்த இளவயது திருமணமானது எவ்வாறான முறையில் இடம் பெற்றது என்பதை அறிந்து கொள்வதற்காக அவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது அவர்களில் அனேகமானோர் நிச்சயிக்கப்பட்ட முறையில் தான் திருமணத்தில் இணைந்துள்ளனர். குறைந்த எண்ணிக்கையுடையோர் காதல் திருமணத்தில் இணைந்துள்ளதோடு மிகக்குறைந்த தொகையினர் வல்லுறவின் பின்னரான திருமணத்தில் இணைந்தவர்கள் என்பது கண்டறியப்பட்டது. (பின்வரும் அட்டவனை 01 ஐப் பார்க்க)

அட்டவணை: 1 ஆய்விற்காக வழங்கப்பட்ட வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்கள்-(2018)

| திருமணம் வகை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| **நிச்சயிக்கப்பட்டது** | 13 | 65% |
| **காதல் திருமணம்** | 05 | 25% |
| **வல்லுறவு** | 02 | 10% |


மேற்காட்டப்பட்ட அட்டவணை 01 ஐ நோக்கும் போது திருமணமானது பெற்றோர் அங்கீகாரத்துடனோ அல்லது காதல் திருமணமாகவோ வல்லுறவின் பின்னரான திருமணமாகவோ அமைந்திருந்த போதிலும் பெரும்பாலும் அவை இளம்வயதில் திருமணங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் குடும்ப வாழ்க்கைக்கு தேவையான பக்குவம் குடும்ப வாழ்க்கைக்கு போதிய அறிவு மற்றும் மனவெழுச்சி என்பவை இவர்களிடம் இல்லாமல் போனமையே இளம்வயதில் அதிகமான விவாகரத்துகள் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகளாக அமைந்துள்ளன. மேலும் இதே போன்று இளம்வயதில் மணமுடித்தோர் அவர்கள் தமது கணவன்மாருடன் வாழ்ந்த காலமும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டது. அவர்களுள் பெரும்பான்மையானோருள் 60 வீதமானோர் சுமார் 10 வருடங்கள் தமது குடும்ப வாழ்வில் இணைந்திருந்தனர் என்றும் இன்னும் 40 வீதமானோர் 15 தொடக்கம் 18 க்கு இடைப்பட்ட வருடங்கள் வாழ்ந்தனர் என்பதனையும் குறிப்பிட்டனர்.

இள வயது தம்பதியினரின் விவாகரத்துக்கு இட்டுச்செல்லும் காரணிகளை பெறப்பட்ட தரவுகளின் படி இரண்டு வகையாக பிரித்து நோக்கியுள்ளோம் .பிரதான காரணிகள்,துணைக்காரணிகள் என வகைப்படுத்திள்ளோம்.இக்காரணிகளின் அடிப்படையில் விவாகரத்து எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை வீத அடிப்படையில் அறிவதற்கு (வரைபடம் 01 ஐப் பார்க்க.)




வரைபடம் 01

இதில் போதைவஸ்து மற்றும் முறைதவறிய தொடர்புகள் ஆகிய இரு காரணிகளும் இளவயது விவாகரத்திற்கு எந்தளவு தூரம் இட்டுச்செல்கின்றது என்பதை அறிவதற்கு வரைபடம் 02 ஐப் பாரக்க





வரைபடம் 02

வரைபு 02 இன்படி இளவயது விவாகரத்தின் பிரதான காரணங்களாக போதைப்பொருள் பாவனை மற்றும் முறை தவறிய தொடர்புகளால் ஏற்பட்ட மறுமணங்களாக இருக்கின்றன. வரைபடம் 02 ஐ நோக்கும் போது பெரும்பான்மையான 55% வீதமானவர் இளம் வயதில் விவாகரத்துப் பெற்ற குடும்பத் தலைவிகளின் கணவன்மார்களில் அதிகமானவர்கள் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி இருப்பது தெரிய வருகின்றது. அதனோடு 45% ஆனோர் வேறு பெண்களுடன் தொடர்புபட்டு மறுமணம் செய்துள்ளனர்.இங்கு இரண்டு பிரதான காரணிகளும் நெருங்கிய விகிதாசாரத்தில் காணப்படுகின்றமை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுகிறது என்பதை தெளிவாக காட்டுகின்றது.மேலும் போதைப்பொருள் பாவனையானது குடும்ப வாழ்வின் விரிசலுக்கு மிக முக்கிய காரணியாக அமைகின்றது என்பதனை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது. மேலும் பிரதான காரணிகள் மட்டுமன்றி பல துணைக்காரணிகளும் இளம் வயது விவாகரத்துக்கு ஏதுவாய் அமைந்திருக்கின்றன என்பதை எமது உரையாடல் மூலம் இனங்காணப்பட்டது.

பிரதான காரணிகள் போன்று இளவயது விவாகரத்திற்கு இட்டுச்செல்கின்ற சில துணைக்காரணிகளையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டியுள்ளது.


அட்டவணை 02 : விவாகரத்திற்கான துணைக்காரணிகளை கண்டறிதல்.




எனவே மேற்படி அட்டவணை 02 இன் முடிவுகளின் அடிப்படையில் சம்புநகர் மற்றும் ஆலங்குலம் வாழ் பிரதேச மக்களின் இளம் வயது விவாகரத்துக்கு பெருமளவான துணைக்காரணிகளாக கணவனின் துன்புறுத்தல்கள் இருப்பது தரவுகளின் மூலம் தெளிவாகின்றது. ஒரு குறித்த தரப்பினர் நிரந்தரத்தொழிலின்மை, வறுமை போன்ற காரணங்கள் வேறு பிரதேசங்களில் தொழில் செய்வதற்கு சாத்தியப்பாடுகள் இருந்தமையை மேற்படி அட்டவனை குறித்துக் காட்டுகின்றது. மேலும் மேற்படி அட்டவனை முடிவுகளின் படி மிகச் சிறுதொகையினர் பாரிய  வயது வித்தியாசத்தின் காரணமாக விவாகரத்து பெற்றனர் என்பது தெளிவாகின்றது. அதே போன்று சிறு தொகையினர் மூன்றாம் நபர் தலையீட்டின் காரணமாக விவாகரத்து பெற்றுள்ளனர் என்பது மேற்படி தரவு சுட்டிக்காட்டுகிறது. அட்டவணை 02 ஐப் பார்க்க.

அதுமட்டுமன்றி கல்வியறிவின்மை மனமுதிர்ச்சியின்மை குடும்ப வாழ்வு பற்றிய அறிவினம் மார்க்க அறிவின்மை போன்ற காரணங்களாலும் இளம் வயது விவாகரத்துக்கள் இடம் பெறுகின்றன. மேலும் விவாகரத்து இடம் பெற்ற முறை குறித்து எமது வினாக்கொத்தினூடாக ஆய்வு செய்யப்பட்ட போது பெரும்பாலான குடும்பங்களில் பெண்கள் தாமாகவே “பஸ்கு” செய்ததாக வினாக்கொத்தினூடாக அறிய முடிகிறது. (பஸ்கு என்பது மணைவி தாமாக விவாக விடுதலை பெறல் என்பதைக் குறிக்கும்). மேலும் இளம்வயது விவாகரத்தினால் குடும்ப தலைவிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்ட போது.

அட்டவணை 03





விவாகரத்து பெற்ற பெண்கள் எதிர்நொக்கும் பிரச்சினைகள் குறித்தும் எமது வினாக்கொத்தின் மூலம் தரவுகள் பெறப்பட்டன. அதன்படி இவ்வாறு இளம்வயதில் விவாகரத்து பெறும் பெண்கள் பல்வேறு வகையான பொருளாதார, சமூக கலாசார விளைவுகளையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்குகின்றனர்.

அட்டவனை இல 03 இனை நோக்கும் போது 30% அதாவது பெரும்பான்மையான விவாகரத்து பெற்ற பெண்கள் தமது வாழ்வாதாரத்திற்கான வழிகள் ஏதும் இன்றி அதிகம் வறுமையிலே தம் வாழ்வைக்கழிக்கின்றனர். அதே போன்று தொடர்ந்தும் தமது பாதுகாப்பை பெற்றோரிடமோ சகோதரர்களிடமோ உறுதி செய்து கொள்ள முடியாத நிலையில் 35% பாதுகாப்பின்மையை எனும் பிரச்சினையை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகிறது. மேலும் விவாகரத்து பெற்றோர் மூன்றாம் நபர் தலையீடு காரணமாக விவாகரத்து பெற்ற பெண்கள் தமது தொடர்வாழ்க்கைப்பயணத்தில் பிள்ளை வளர்ப்பில் கடினமான ஒரு நிலையை உணர்வதோடு. அதேபோன்று பிள்ளைகள் தாய் தந்தை மூன்றாம் நபர் என அனைவரதும் கட்டுப்பாட்டின் கீழ் வளர்க்கப்படுவதனால் அவர்கள் மன அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு வளர்வதாகவும் எமது மறைமுக உரையாடலின் மூலம் அறிய முடிந்தது.


அதே நேரம் மேற்கூறப்பட்ட மூன்று காரணங்களாலும் பிள்ளைகளின் கல்வி வாழ்க்கை மற்றும் எதிர்காலம் பாதிப்படைகின்றது என்பதோடு அவர்கள் உளவியல் ரீதியாகவும் பாதிப்படைகின்றனர் என்பதை இனங்கான முடிகிறது. மேலும் விவாகரத்தின் பின்னரான அவர்களது உள நிலை குறித்து வினாக்கொத்தினுாடாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்களுள் பெரும்பான்மையினர் கணவன்மாரின் தொல்லையின்றி மனதளவில் திருப்தியாக வாழ்வதாக கீழ்வரும்வரைபின் அறிய முடிகிறது.

அட்டவனை 04 : விவாகரத்து பெற்றோரினது மனோநிலையை அறிதல்.




இறுதியாக விவாகரத்து பெற்றோருள் தமது வருமானத்திற்காக எவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வருமானத்தை ஈட்டிக்கொள்கின்றனர் என வினவப்பட்ட போது அவர்களின் நிலைப்பாடு குறித்து பின்வரும் அட்டவனை 04 தெளிவுபடுத்துகின்றது.

அட்டவனை 05 : அவர்களது தேவைகளை ஈடுசெய்வதற்கு மேற்கொள்ளும் வழிகளைக் கண்டறிதல்.



அவர்களது தேவையை நிறைவேற்ற வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகளைக் கண்டறிதல் இதன் போது அவர்களது வருமானத்தை ஈட்டிக்கொள்ள அவர்களுள் 50% பெரும்பாலானோர் தோட்ட வேலை மற்றும் வேறு தொழில் செய்பவராகவே காணப்படுகின்றனர்.அவர்களுள் 15% ஆனோர் வருமானமேதுமின்றி தம் உறவினர் பொறுப்பில் இருப்பதாகவும் 25% ஆனோர் கோழி வளர்ப்பு போன்ற சிறு கைத்தொழில் வேலைகளில் ஈடுபடுவதாகவும்5% மிகச்சிறிய தொகையினரே கணவனிடமிருந்து ஒரு சிறு தொகையினரே குறிப்பிட்ட தொகையை வாழ்வாதாரமாக பெறுவதாகவும் அறிய முடிகிறது.

எனவே மேற்கூறப்பட்டவை யாவும் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்டவையாகும்.

**முடிவுரை**

எனவே குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசமான ஆலங்குலம் மற்றும் சம்புநகர் கிராமங்களை மையப்படுத்திய இளம் வயதில் விவாகரத்து பெற்ற பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றிய இவ்வாய்வில் கிடைத்த தரவுகளின் படி விவாகரத்து பெற்ற பெண்களின் கணவன்மார்களில் அதிகமானோர் போதைப்பொருளுக்கு அடிமையானோர் என்பது கண்டறியப்பட்டது. அத்தோடு திருமண வாழ்வின் தாத்பரியம் பற்றிய அறிவீனம், கல்வி அறிவீனம் போன்றனவும் இளவயது விவாகரத்துக்கு இட்டுச்செல்கின்றது. இக்காரணங்களால் விவாகரத்துப் பெறும் இளவயதுப்பெண்கள் பாதுகாப்பு ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

**ஆலோசனைகளும் பரிந்துரைகளும்**

வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் மூலம் விவாகரத்திற்கு இட்டுச்செல்லும் காரணிகளும் விவாகரத்தின் மூலம் இடம்பெறும் பிரச்சினைகளும் துல்லியமாக அடையாளம் காணப்பட்டது. அந்தவகையில் இவ்வாய்வின் நோக்கங்களை பூர்த்தி செய்யும் வகையில் விவாகரத்தை குறைப்பதற்கும் குடும்ப வாழ்வை சுமூகமாக தொடர்வதற்குமான பின்வரும் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

1. குறிப்பிட்ட இவ்விரு பிரதேசங்களிலும் குடும்ப வாழ்வின் நோக்கம் பற்றிய விரிவான விழிப்பூட்டலை மேற்கொள்ளல்.
2. திருமணத்திற்கு முந்திய உளவள ஆலோசனைகளை வழங்கல்.
3. இள வயது விவாகரத்திற்கான காரணிகளைக்கண்டறிதல்.
4. இள வயது திருமணம் முடிப்பது தொடர்பாகவும் அதனால் ஏற்படும் உள, உடல், சமூக பாதிப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
5. சமூக நிறுவனங்கள் ,பிரதேச பள்ளிவாயல் நிர்வாகம் இவற்றில் அதிக ஈடுபாடு செலுத்துவது அவசியமாகும்.

**உசாத்துணைகள்**


- அப்துல் நசார்(2016),தலாக்-விவாகரத்து நிகழ்வது எதற்காக?
- அபூமுஹை,(2005)தலாக் ஓர் விமர்சனம். (islamkalvi.com)
- உஷ்தாத் ஹஜ்ஜுல் அக்பர்(2013), பெண் நீதமும் நிதர்சனமும்.அல்ஹஸனாத் வெளியீட்டகம். கொழும்பு.இலங்கை.

- பவாஸ் ரௌஸ்தீன் (2016),முஸ்லிங்கள் மத்தியில் அதிகரித்து வரும் விவாகரத்து காரணங்கள் விளைவுகள் பற்றிய ஓர் எடுத்துரைப்பு.
- பாத்திமா உமாமா (2010),நானும் விவாகரத்து பெற்றவள் ஆனாலும்.அல்ஹஸனாத்.(இதழ் 07 ஜூலை).
- பௌஸூல் எம்.பி.(2015),இலங்கை முஸ்லிங்களிடையே பெருகியுள்ள விவாகரத்தும் சமூகக்கட்டமைப்பில் அதன் தாக்கங்களும் .உண்மை உதயம்.பரகஹதெனிய ஜம்யதுல் அன்ஸாரிஸ் ஸுன்னதுல் முஹம்மதியா.
- மொஹமட் இம்தியாஸ்.எஸ்.எம்(2013),முஸ்லிம் சமூகத்தின் குடும்ப நிலை.(:http://www.jaffnamuslim.com/2013/07/part-1.html)
- ஸம்ஹா.எப், தாரிக்.எம்,ருமானா.எம் (2017),விவாகரத்து இடம் பெறுவதற்கான காரணங்கள். நான்காவது சர்வதேச ஆய்வுமாநாடு. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிபீடம்.இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.
- ஹஸ்னா சேகு(2015),இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சம நீதி முஸ்லிம் விவாகம் .விவாகரத்துச்சட்டமும் இஸ்லாமியச்சட்டமும் .கொழும்பு:இலங்கை அவிருத்திக்கபன ஊடகவியலாளர் மன்றம்.
- ஜெஸீமா ஹமீட்.(2016),இலங்கை முஸ்லிம் பெண்களிடையே அதிகரித்து வரும் விவாகரத்து பிரச்சினைகளும் தீர்வும்.உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.கொழும்பு.